பூமித் தாயே பூமித் தாயே சிவந்தாயா உன் புதல்வர்கள் உடலை
புதைப்பொருளாக சுமந்தாயா
பூமித் தாயே பூமித் தாயே சிவந்தாயா உன் புதல்வர்கள் உடலை
புதைப்பொருளாக சுமந்தாயா
பகைவனின் தோட்டாவை பனிப்போல தாங்கினாய் ஆகாய கடைகளை அடி
நெஞ்சில் வாங்கினாய் எப்போது சுதந்திரம் எனைய் என்றும் ஏங்கினார்
வீரத்தில் பொங்கியே விழி ஓரம் வீங்கினார் தாய் மண்ணை நினைத்தே தன்
ஜீவன் நீங்கினா உடல் சாய்ந்த பின்தானே இரு கண்கள் தூங்கினா

மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்
மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்

போய்வருக மகனே போய்வருக மகனே புலித்தாய் கை அசைத்தாள் களம்
சென்ற போது உயிர் போகும் எனினும் வீரத்தை விதைவிதைத்தா இனி என்று
வருவான் இனி எங்கு காண்போம் என்றாலும் புன்னகைதார் கார்த்திகை
மாதம் 27 கண்ணீரில் முகம் கரைத்தாள்
மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்
மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்

அன்புள்ள அண்ணா அன்புள்ள அண்ணா ஒருதங்கை குரல் கொடுக்க அவள்
அண்ணன் ஓர் நாள் தாய்மண்ணை காத்து மண்ணுக்குள் குடியிருக்க
எங்கே என் கணவன் எங்கே என் கணவன் ஒரு மனைவி கண் சிவக்க அவள்
கணவன் அன்றோ எதிரியை கொல்ல தன் உயிரை தந்து இருக்க
மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்
மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்

மண்ணுக்குள் இங்கே மறைந்துள்ள உடல்கள் உடல் அல்ல தீகிடங்கு யார்
வந்து இதையே கண்டாலும் பொங்கும் தமிழ் வீரம் இரு மடங்கு தாய் நாடு
வேண்டி தமிழீழம் வேண்டி உயிர் தந்த வீரம் இங்கு கல்லறை நடுவில் மாவீரர்
பெயரில் ஊதடா வெற்றி சங்கு

மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்
மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்
வருடத்தில் ஓர் நாள் வருவார்கள் இந்த மாவீரர் துயில் இடத்தில் தீபங்கள்
ஏற்றி பூதூவ தூவி உருகுவாள் நினைவிடத்தில் இவர் பெயர் வாழும் இவர் வீரம்
வாழும் தமீழீழ வரைபடத்தில் விடுதலை தாகம் நரம்புக்குள் கூடும் இவராளே
போர் களத்தில்

மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்

மாவீரர் துயிலும் இடம் இது மகத்தான வீரத்தடம் வழிந்தோடும் குருதிக்கூடம்
இது வரலாறு நிமிர்ந்த இடம்